கூட்டுறவு, உணவு மற்றும்
நுகர்வோர் பாதுகாப்புத் துறை

# கூட்டுறவு

கொள்கை விளக்கக் குறிப்பு

2018–2019

மானியக் கோரிக்கை எண் : 12


**செல்லூர் கே. ராஜூ**

கூட்டுறவுத் துறை அமைச்சர்



©
தமிழ்நாடு அரசு
2018

# பொருளடக்கம்


| இயல் எண் | தலைப்பு | பக்கம் எண் |
|---|---|---|
| | முகவுரை | 1-4 |
| I | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 5-40 |
| II | கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | 41-65 |
| III | நுகர்வோர் கூட்டுறவுகள் | 66-71 |
| IV | சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள் | 72-78 |
| V | பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு | 79-87 |
| VI | கூட்டுறவு கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 88-96 |
| VII | ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் | 97-99 |
| VIII | கூட்டுறவுத் தேர்தல் | 100-102 |
| | நிறைவுரை | 103 |

# முகவுரை

1. கூட்டுறவில் ஜனநாயகக் கோட்பாடு என்பது தமிழ்நாட்டில் பல ஆண்டுகளுக்கு முன்னரே அறியப்பட்டு, ஏழை எளிய மக்களின் வாழ்வு மேம்பட "கூட்டுறவு இயக்கத்தை" நாட்டிற்கு அறிமுகப்படுத்தியதில், தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்கிறது. 1904 ஆம் ஆண்டு திருவள்ளூர் மாவட்டத்தில், திரூரில் முதல் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் தொடங்கப்பட்டது. ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்வின் முன்னேற்றத்திற்கு கூட்டுறவுத்துறை முக்கிய பங்காற்றி வருகிறது.

2. கடன் மற்றும் பிற இடுபொருட்களை வழங்கி மாநிலத்தின் வேளாண் வளர்ச்சியில் மிகப்பெரிய தாக்கத்தைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொண்டு வந்துள்ளன. இடைத்தரகர்களின் குறுக்கீடு இன்றி, வேளாண் விளைபொருட்களுக்கான உரிய

விலை விவசாயிகளுக்கு கிடைத்திட, கூட்டுறவுத்துறை முக்கிய பங்கு வகிக்கிறது. கூட்டுறவுகள், உறுப்பினர்களின் வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்தல் மற்றும் பொதுவிநியோகத்திட்டத்தின் மூலம் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்தல் உட்பட நுகர்வோர் தேவைகளையும் நிறைவு செய்து, பெரும் பணியாற்றி வருகின்றன.

3. மாநிலத்திலுள்ள கூட்டுறவு நிறுவனங்களால் விவசாயிகளுக்கு 7 சதவீத வட்டியில் பயிர்க்கடன்கள் வழங்கப்படுகிறது. உரிய காலத்தில் பயிர்க்கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கான வட்டித்தொகையை முழுமையாக அரசே ஏற்றுக்கொள்கிறது. பயிர்க்காப்பீடு வழங்குவதுடன், கறவை மாட்டுக்கடன், டிராக்டர் கடன், சொட்டு நீர்ப்பாசனக்கடன் போன்ற வேளாண் முதலீட்டுக் கடன்களும் கூட்டுறவுகளால் வழங்கப்பட்டு வருகின்றன.

4. மலைவாழ் மக்களால் உற்பத்தி செய்யப்படும் சாமை, வரகு, புளி மற்றும் தேன் ஆகிய பொருட்களை விற்பனை செய்வதற்கு உதவி அளித்தும், பதனிடும் அலகுகள் அமைத்தும் உரிய விலையினை இடைத்தரகர்கள் இன்றி முழுமையாக பெற்றிட கூட்டுறவு நிறுவனங்கள் துணை நின்று வருகின்றன.

5. நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டு, வெளிச்சந்தையில் விலை உயர்வை கட்டுப்படுத்துவதில் உதவி புரிகின்றன. மாநிலம் முழுவதும் உள்ள நகர்ப்புற பகுதிகளில், பண்ணை பசுமை நுகர்வோர் கடைகள் கூட்டுறவுகள் மூலம் திறக்கப்பட்டு, இவற்றின் மூலம், தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை

செய்யப்பட்டு வருகின்றன. தரமான மருந்துகள் கூட்டுறவுகள் நடத்தும் “அம்மா மருந்தகம்” மூலம் பொது மக்கள் நலனுக்காக தள்ளுபடி விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

6. தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவுகள் பெரும்பாலான நியாயவிலைக்கடைகளை நடத்துவதுடன் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதிலும் முக்கியப் பங்கு ஆற்றுகின்றன.

# இயல் - 1

# கூட்டுறவுக் கடன் அமைப்பு

## 1. முன்னுரை

**1.1** கூட்டுறவு கடன் அமைப்பு, மாநிலம் முழுவதும் பரவலாக அமைந்துள்ள முக்கிய கடன் வழங்கும் அமைப்பாகும். இவை, நியாயமான வட்டி விகிதத்தில் கடன் வழங்கி, மக்களின் கடன் தேவைகளை பூர்த்தி செய்து வருகின்றன. கிராமப்புற மக்கள், தங்களின் கடன் தேவைக்காக எளிதில் அணுகக் கூடிய நிறுவனங்களாக கூட்டுறவு கடன் நிறுவனங்கள் உள்ளன.

**1.2** மாநிலத்தில் உள்ள கூட்டுறவுக் கடன் அமைப்புகள், குறுகிய காலக் கடன் மற்றும் நீண்டக் காலக் கடன்களை வழங்குகின்றன. குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பு, மாநில அளவில், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியையும், மாவட்ட அளவில் மத்தியக் கூட்டுறவு

வங்கிகளையும், கிராம அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் உள்ளடக்கியுள்ளது. நீண்ட காலக் கடன், அமைப்பு மாநில அளவில், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும், வட்ட / வட்டார அளவில் தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியுள்ளது. நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை உள்ளடக்கிய நகரக்கூட்டுறவு கடன் அமைப்பானது நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள நடுத்தர மற்றும் அடித்தட்டு மக்களுக்கு பல்வேறு வங்கி சேவைகளை வழங்கி வருகின்றன. பணியாளர்கள் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், மத்திய, மாநில அரசு பணியாளர்கள், அரசு பொதுத் துறை நிறுவனங்களின் பணியாளர்கள் மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் ஆகியோரின் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

## 2. குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பு

குறுகிய கால கூட்டுறவுக் கடன் அமைப்பானது, மாநில அளவில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியினையும், மாவட்ட அளவில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகளையும், கிராம அளவில் 4,462 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களையும் கொண்டதாக உள்ளது.

### 2.1 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள்

(i) மாநிலத்தில், 4,462 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. கிராமப்புறங்களில் வேளாண் மற்றும் வேளாண் சாரா கடன்களை வழங்குவதே இச்சங்கங்களின் முக்கிய நோக்கமாகும். பயிர்க்கடன் மற்றும் பண்ணை இயந்திரங்கள் வாங்குதல், நுண் நீர்பாசனம், கறவை மாடுகள் போன்ற வேளாண் சார்ந்த பணிகளுக்காக வழங்கப்படும் கடன்கள் வேளாண் கடன்களாகும். வீட்டுவசதிக் கடன், சுய

உதவி குழுக்களின் வருவாய் ஈட்டும் நடவடிக்கைகளுக்கு வழங்கப்படும் கடன்கள், பண்ணைச் சாராக் கடன்கள் போன்றவை வேளாண் சாரா கடன்களாகும். இச்சங்கங்கள், விவசாய இடுபொருட்களான உரம், விதைகள் மற்றும் சிறு வேளாண் கருவிகள் விற்பனையையும் மேற்கொண்டு வருகின்றன.

(ii) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் கடந்த ஐந்தாண்டுகளில் கடன் வழங்கிய விவரம் மற்றும் வைப்புத் தொகை ஆகியவற்றின் ஒப்பீட்டு விவரம் பின்வருமாறு:—

**(ரூ.கோடியில்)**

| விவரம் | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017 - 18 |
|---|---|---|---|---|---|
| வைப்புத் தொகை | 5,995.49 | 5,987.72 | 6,874.66 | 7,352.64 | 6,606.17 |
| கடன் வழங்கியது | 20,989.51 | 20,326.63 | 19,409.52 | 15,403.51 | 17,784.88 |

## 2.2. மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

மாநிலத்தில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், பொதுமக்களிடமிருந்து பெறப்படும் வைப்புத் தொகைகள், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியிடமிருந்து பெறப்படும் கடன் மற்றும் மறுநிதி மூலம் நிதி ஆதாரங்களைப் பெறுகின்றன. இவ்வங்கிகள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், நுகர்வோர் கூட்டுறவுகள், வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், கூட்டுறவு நூற்பாலைகள் போன்ற இணைப்புச் சங்கங்களுக்கு கடன் மற்றும் வங்கியியல் சேவைகளை வழங்கி வருகின்றன. இவ்வங்கிகள், வட்ட மற்றும் வட்டார அளவில் 848 கிளைகளுடன் செயல்பட்டு வருகின்றன. இக்கிளைகள் மூலமாக நேரடியாக பொது மக்களுக்கு வங்கியியல் சேவைகள் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்திய ரிசர்வ் வங்கி, 23 மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கும் வங்கியியல் உரிமம் வழங்கியுள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிகளின் கடந்த ஐந்து ஆண்டுகளின் செயல்பாடுகளின் ஒப்பீட்டு விவரம் பின்வருமாறு:-

**(ரூ.கோடியில்)**

| வ. எண் | விவரம் | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017-18 * |
|---|---|---|---|---|---|---|
| 1 | உறுப்பினர்களின் பங்கு மூலதனம் | 973.37 | 1,052.70 | 1,248.49 | 1,252.23 | 1,303.07 |
| 2 | மாநில அரசின் பங்கு | 70.45 | 63.70 | 63.70 | 67.94 | 67.40 |
| 3 | ஒதுக்கீடு மற்றும் உபரி | 2,941.57 | 3,351.33 | 3,537.67 | 3,460.53 | 3,579.56 |
| 4 | வைப்புகள் | 21,309.87 | 22,748.33 | 25,667.74 | 28,343.91 | 27,748.63 |
| 5 | பெறப்பட்ட கடன்கள் | 5,750.20 | 5,609.60 | 5,043.30 | 4,340.41 | 4,842.30 |

*** உத்தேசமாக**

மத்தியக் கூட்டுறவு வங்கிகள், இணைப்புச் சங்கங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

மற்றும் நுகர்வோர் கூட்டுறவுகளின் வியாபார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. பல தொடக்க சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களைச் சீரமைத்து மற்றும் மாற்றி அமைத்ததன் மூலம், இச்சங்கங்களின் வட்டிச் சுமையைக் குறைத்து வணிக வளர்ச்சிக்கும், நிதி நிலை மேம்பாட்டிற்கும் உதவி வருகின்றன.

மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையை அளிப்பதற்காக, அனைத்து மத்தியக் கூட்டுறவு வங்கிகளிலும் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (Core Banking Solution) நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. இதன் மூலம், இந்தியாவில் எந்த ஒரு இடத்திற்கும் நிகழ் நேர மொத்த தீர்வு (Real Time Gross Settlement) மற்றும் தேசிய மின்னணு நிதிப் பரிமாற்றம் (National Electronic Funds Transfer) வாயிலாக மின்னணு பணப்பரிமாற்றம் செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ளது. மத்திய கூட்டுறவு வங்கிகள், மார்ச் 2017 முதல் குறுஞ்செய்தி வசதியினை

வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகின்றன. மாநிலத்தில், கூட்டுறவு வங்கியியல் வரலாற்றின் மைல்கல் சாதனையாக மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 50 தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம் (Automated Teller Machine) நிறுவப்பட்டுள்ளது. மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களுக்கு ரூபே பற்று அட்டைகளும் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் பெறும் விவசாயிகளுக்கு ரூபே வேளாண் கடன் அட்டைகளும் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய கூட்டுறவு வங்கிகளின் பணியாளர்களின் திறனை மேம்படுத்தும் பொருட்டு, 2017-18ஆம் ஆண்டில், கடன் மதிப்பீடு, நிதிமேலாண்மை, வணிக வளர்ச்சி மற்றும் செயலற்ற சொத்து மேலாண்மை போன்ற பொருட்களில் 246 பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

## 2.3 தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் இணையமாக செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமை கூட்டுறவு வங்கி, சென்னையிலுள்ள 47 கிளைகள் மூலம் பொதுமக்களுக்கு சிறப்பாக வங்கிச் சேவையை வழங்கி வருகிறது. இவ்வங்கி, மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் கடன் கொள்கைகளை வகுப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. பொது மக்களிடமிருந்து பெறும் வைப்பு நிதி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடம் பெறும் மறுநிதி உதவி மற்றும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் போன்ற நிதி நிறுவனங்களிடம் பெறும் கடன் ஆகியவற்றின் மூலம் நிதியாதாரங்களைத் திரட்டி வருகிறது. மேலும், இவ்வங்கி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்குவதற்காக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதி உதவி பெற்று

மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு மறுநிதி உதவி அளிக்கிறது. இவ்வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு பிற கடன் வழங்குவதற்கும் நிதியுதவி அளிக்கிறது. தலைமை வங்கி, கூட்டுறவு வங்கிகளின் மிகை நிதியைக் கையாள்வதுடன், நிதிமேலாண்மை குறித்த வழிகாட்டுதலையும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கி வருகிறது. இவ்வங்கியினால் நடத்தப்படும் வேளாண் கடன் பணியாளர் கூட்டுறவுப் பயிற்சி மையத்தின் மூலம் மத்திய கூட்டுறவு வங்கி மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பணியாளர்களின் திறனை மேம்படுத்துவதற்கான பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தொடர்ந்து நிதிநிலையில் வலுவான நிறுவனமாகத் திகழ்ந்து வருகிறது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் செயல்பாடுகளின் ஒப்பீடு விவரம் பின்வருமாறு:–

**(ரூ.கோடியில்)**

| வ. எண் | விவரம் | 2013-14 | 2014-15 | 2015-16 | 2016-17 | 2017 – 18 * |
|---|---|---|---|---|---|---|
| 1 | உறுப்பினர் களின் பங்கு | 269.33 | 282.44 | 287.30 | 291.77 | 291.77 |
| 2 | மாநில அரசின் பங்கு | 20.26 | 20.26 | 20.26 | 20.26 | 20.26 |
| 3 | ஒதுக்கீடு மற்றும் உபரி | 797.66 | 827.21 | 855.63 | 778.66 | 793.75 |
| 4 | வைப்புகள் | 9,617.40 | 7,767.79 | 8,927.93 | 11,240.46 | 8,271.86 |
| 5 | பெறப்பட்ட கடன்கள் | 2,652.93 | 3,309.24 | 3,037.81 | 2,455.26 | 2,847.67 |
| 6 | நிகர இலாபம் | 32.21 | 41.38 | 43.31 | 43.70 | **132.81** |

*** உத்தேசமாக**

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை (Core Banking Solution) நடைமுறைப்படுத்தப்பட்டு உள்ளது. இவ்வங்கி சென்னையில் 10 இடங்களில் தானியங்கிப் பணம் வழங்கும் இயந்திரங்கள்

(Automated Teller Machine) மூலமாக சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி வருகிறது. தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு ஏடிஎம் ரூபே பற்று அட்டை வழங்கப்படுகிறது. இந்த அட்டைகளை பிற வணிக வங்கிகளின் பற்று அட்டைகளை போன்று, **இந்தியாவிலுள்ள எந்த ஒரு தானியங்கி பணம் வழங்கும் இயந்திரத்திலும் பயன்படுத்தலாம்.** இந்தியாவில் எந்த இடத்திற்கும் நிகழ் நேர மொத்தத் தீர்வு (Real Time Gross Settlement) **ம**ற்றும் தேசிய மின்னணு நிதிப்பரிமாற்றம் (National Electronic Funds Transfer) மூலம் உடனுக்குடன் மின்னணு பணப்பரிமாற்றம் செய்திடும் வசதிகளையும் வழங்கி வருகிறது. இதர வங்கியியல் சேவைகளான அலைபேசி வங்கியியல் சேவை, குறுஞ்சேவை வசதி, உடனடி கட்டண சேவை வசதி (IMPS) போன்ற வசதிகளும் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியினையும், வைப்புத் தொகை உத்தரவாத நிதியினையும் பராமரித்து வருகிறது. மத்திய கூட்டுறவு வங்கிகள் நிதிப்பங்களிப்பிலிருந்து உருவாக்கப்பட்ட தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியானது கூட்டுறவு நிறுவனங்களில் உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தப் பயன்படுத்தப்படுகிறது. வைப்புத் தொகை உத்தரவாத நிதிக்கு, தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பங்களித்து வருகின்றன. இந்நிதியானது பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட வைப்பு நிதிகளைத் திரும்ப வழங்க இயலாத தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் பொதுமக்களுக்கு வைப்புத் தொகைகளை திரும்ப வழங்குவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், பொது மக்களிடையே கூட்டுறவு நிறுவனங்களின் மீதான நம்பிக்கையை

மீட்பதிலும், நம்பகத் தன்மையை உயர்த்துவதிலும் துணைபுரிகிறது. 31.03.2018 தேதியில் தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியில் ரூ.33.56 கோடியும், வைப்புத் தொகை உத்தரவாத நிதியில் ரூ.205.22 கோடியும் இருப்பில் உள்ளது.

## 2.4. வழங்கப்படும் சேவைகள்

### (i) பயிர்க்கடன்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களால் வழங்கப்படும் வேளாண்மை கடன்களில் முக்கியமானது பயிர்க்கடன் ஆகும். பயிர்க் கடன் வழங்குதலில் அனைவரையும் உள்ளடக்கி கடன் வழங்கும் வகையில், ஆதிதிராவிடர் / பழங்குடியின விவசாயிகள் உள்ளிட்ட புதிய விவசாயிகளுக்கும் பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. விவசாயிகளின் வருவாயினை உயர்த்திடவும், விவசாய உற்பத்தியினை அதிகரிக்கவும் குறைந்த வட்டியிலான கடன் வழங்கும்

திட்டம் நடைமுறையில் இருக்க வேண்டியது அவசியம் என அரசு கருதுகிறது. அதன்படி, கூட்டுறவு நிறுவனங்களால் வழங்கப்படும் பயிர்க் கடன்களுக்கான வட்டிவிகிதம் 9% லிருந்து 7% ஆக குறைக்கப்பட்டுள்ளது. மாநில அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு 2% வட்டி தொகையினை, இந்திய அரசிடமிருந்து பெறப்படும் வட்டி மானியத் தொகையுடன் கூடுதல் மானியமாக வழங்குகின்றது. மேலும், பயிர்க் கடனுக்கு 7% வட்டி விகிதம் நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், உரிய காலத்திற்குள் கடனைத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப் படுவதில்லை.

2017-18ஆம் ஆண்டில், 10,63,821 விவசாயிகளுக்கு ரூ.6,220.27 கோடி பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது. 2016-17ஆம் ஆண்டில், 7,62,772 விவசாயிகளுக்கு ரூ.4,227.98 கோடி பயிர்க்கடனாக வழங்கப்பட்டுள்ளது. இதில், 2017-18ஆம் ஆண்டில், 1,12,739 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு

ரூ.556.61 கோடி பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. அரசு, கூட்டுறவு நிறுவனங்களுக்கு வட்டி மானியம் அளித்து வருவதால், கூட்டுறவு நிறுவனங்கள் உரிய காலத்திற்குள் கடனை திருப்பிச் செலுத்தும் விவசாயிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிப்பதில்லை. நிலையான வளர்ச்சி இலக்கினை எய்துவதற்கு, இந்த அரசு விவசாயிகளுக்கு வட்டி மானியம் மற்றும் வட்டி ஊக்கத்தொகையாக ரூ. 200 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது.

**(ii) கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கான கடன்கள்**

சிறு மற்றும் குறு விவசாயிகள், வாரத்துக்கு பயிர்செய்வோர், குத்தகைக்குப் பயிரிடுவோர் மற்றும் வாய்மொழி குத்தகைதாரர்கள் ஆகியோர் அடங்கிய 40,000 கூட்டுப்பொறுப்புக் குழுக்கள் உள்ளன. அனைவரையும் வங்கிப் பரிமாற்றத்திற்குள் கொண்டு வருவதை ஊக்குவிக்கும் வகையில், கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்கு வேளாண்மைக் கடன் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் மூலம் இவர்கள் கூட்டாக உரங்கள்

மற்றும் விதைகளை வாங்கவும், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் இயந்திரங்களைக் கையாள்வதற்கும் சாத்தியமாகியுள்ளது. 2016-17ஆம் ஆண்டில், 8,871 கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.323.20 கோடி வழங்கப்பட்ட பயிர்க் கடன், 2017–18 ஆம் ஆண்டில், 13,865 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.360.28 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது. 2016-17ஆம் ஆண்டில், 311 கூட்டுப்பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.16.76 கோடி வழங்கப்பட்ட முதலீட்டுக் கடன், 2017–18 ஆம் ஆண்டில், 1,649 கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.35.11 கோடி ஆக உயர்ந்துள்ளது.

**(iii) வேளாண்மை மற்றும் வேளாண் சார்ந்த முதலீட்டுக் கடன்**

சொத்துக்களை உருவாக்கும் நோக்குடனும், நிலைத்த வேளாண் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறன் உயர்வை உறுதி செய்யவும், விவசாயத்திற்கு முதலீட்டுக் கடன் வழங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. இதனை எய்துவதற்காக, கூட்டுறவு சங்கங்கள், வேளாண் இயந்திரமயமாக்குதல், நில மேம்பாடு

போன்ற முதலீட்டு நோக்கங்களுக்கு கடன்களை வழங்கி வருகின்றன. 2016-17ஆம் ஆண்டில், ரூ.172.74 கோடி முதலீட்டுக் கடன் வழங்கப்பட்டது. 2017-18 ஆம் ஆண்டில், முதலீட்டுக் கடன் வழங்குதல் ரூ.365.01 கோடியாக அதிகரித்துள்ளது. 2016-17ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர் / பழங்குடியினருக்கு வழங்கப்பட்ட ரூ.11.44 கோடி முதலீட்டுக் கடன், **2017-18ஆம் ஆண்டில், ரூ39.80 கோடியாக உயர்ந்துள்ளது.**

**(iv) தானிய ஈட்டுக் கடன்**

விவசாயிகளின் உடனடி நிதித்தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு, கூட்டுறவு நிறுவனங்களுக்குச் சொந்தமான கிடங்குகளில், விவசாயிகளின் விளைபொருட்களை இருப்பு வைத்து அதற்கு ஈடாக தானிய ஈட்டுக் கடன் வழங்கப்படுகிறது. அறுவடைக்காலங்களில் விளைபொருட்களின் விலை மிகக் குறைவாக உள்ள போது, சிறு மற்றும் குறு விவசாயிகளின் தானியங்களைச் சேமித்து வைத்து, இலாபகரமான

விலை கிடைக்கின்ற போது விற்றுப் பயனடைய வாய்ப்பளிக்கிறது. 2016-17ஆம் ஆண்டில், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட ரூ.198.08 கோடி தானிய ஈட்டுக் கடன், **2017-18ஆம் ஆண்டில், ரூ.218.33 கோடியாக அதிகரித்துள்ளது.**

**(v) சிறு வணிகர்களுக்கான சிறு வணிகக் கடன்**

மத்தியக் கூட்டுறவு வங்கிகளும் நகரக் கூட்டுறவு வங்கிகளும் தனித்தன்மை வாய்ந்த இத்திட்டத்தைச் செயல்படுத்தி வருகின்றன. இத்திட்டத்தின் கீழ், பூ, காய்கறிகள் மற்றும் பழங்கள் வியாபாரம் செய்தல், பெட்டிக்கடை நடத்துதல் போன்ற சிறு வியாபாரம் செய்பவர்களுக்கு எவ்விதப் பிணையமுமின்றி, ரூ.25,000 வரை கடன் வழங்கப்படுகிறது. 2016-17ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ.177.51 கோடி சிறுவணிகக் கடன், **2017-18 ஆம் ஆண்டில் ரூ.254.02 கோடியாக அதிகரித்துள்ளது.**

**(vi) சுய உதவிக் குழுக்களுக்கு நிதியுதவி**

சுய உதவிக் குழுக்களுக்கு கடன் வழங்கி, குழுக்களின் கடன் தேவைகளை நிறைவு செய்ய கூட்டுறவு நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. 2016-17ஆம் ஆண்டில், வழங்கப்பட்ட ரூ.525.99 கோடி சுயஉதவிக்குழுக் கடன், **2017-18ஆம் ஆண்டில், ரூ.810.95 கோடியாக அதிகரித்துள்ளது.**

**(vii) மகளிர் தொழில் முனைவோர் கடன் திட்டம்**

மகளிர் தொழில் முனைவோர், சிறு தொழில் தொடங்கவும், சேவை மையங்கள் அமைக்கவும், மத்திய கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் ரூ.10 இலட்சம் வரை கடன்கள் வழங்கி வருகின்றன. 2016-17ஆம் ஆண்டில், வழங்கப்பட்ட ரூ.50.23 கோடி மகளிர் தொழில் முனைவோர் கடன், **2017-18ஆம் ஆண்டில், ரூ.79.60 கோடியாக அதிகரித்துள்ளது.**

**(viii) பணிபுரியும் மகளிர் கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகரக் கூட்டுறவு வங்கிகள் மாதச் சம்பளம் பெறும் மகளிருக்கு நுகர்வோர் கடன்கள் வழங்குகின்றன. 2016-17ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ரூ.48.94 கோடி பணிபுரியும் மகளிர் கடன், **2017-18ஆம் ஆண்டில் ரூ.92.64 கோடியாக அதிகரித்துள்ளது.**

**(ix) மாற்றுத் திறனாளிகளுக்கான கடன்**

கூட்டுறவுச் சங்கங்கள் மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திட அவர்களின் வருமானத்தை உயர்த்திடும் செயல்களுக்கு கடன்கள் வழங்கி வருகின்றன. 2011-12 முதல் உரிய காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்தும் மாற்றுத் திறனாளிகளிடமிருந்து வட்டி ஏதும் வசூலிக்கப் படுவதில்லை. 2016-17ஆம் ஆண்டில், வழங்கப்பட்ட ரூ.22.80 கோடி மாற்றுத் திறனாளிகள் கடன், **2017-18 ஆம் ஆண்டில், ரூ.42.79 கோடியாக அதிகரித்துள்ளது.**

**(x) பயிர்க்காப்பீடு**

புதிய பயிர்க்காப்பீட்டு திட்டமான பிரதம மந்திரி பசல் பீமா யோஜனா (PMFPY)-இன் கீழ், 2017-18 ஆம் ஆண்டில், பயிர்க்காப்பீட்டு இழப்பீட்டு தொகை ரூ.2,207.07 கோடி, கூட்டுறவு சங்கங்களின் மூலமாக 7,42,410 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், 2017-18 ஆம் ஆண்டில் 8,57,302 விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் சேர்க்கப்பட்டு, காப்பீட்டு தொகையாக கூட்டுறவு நிறுவனங்களால் ரூ.81.53 கோடி காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்தப்பட்டுள்ளது.

**(xi) வறட்சி நிவாரணம்**

வடகிழக்கு பருவ மழை பொய்த்ததன் காரணமாக, அரசு 2016-17ஆம் ஆண்டில், அனைத்து மாவட்டங்களையும் வறட்சி பாதித்த மாவட்டங்களாக அறிவித்து, கூட்டுறவு மற்றும் வணிக வங்கிகளில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன்களை மத்திய கால

கடன்களாக மாற்றியமைக்கப்படும் என ஆணையிட்டது. மேலும், இத்திட்டத்தின் கீழ் குறுகிய கால பயிர்க்கடன்களை, மத்திய கால கடன்களாக மாற்றம் செய்யப்படும் கால அவகாசத்தை 31.12.2017 வரை நீட்டித்தது. இத்திட்டத்தின் கீழ் 82,455 விவசாயிகள் பெற்றுள்ள ரூ.250.88 கோடி அளவிலான **குறுகிய கால கடன்கள் மத்திய கால கடன்களாக** மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

**(xii) வேளாண் பாதுகாப்பு மையம்**

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில், விவசாயிகளுக்கு மண் பரிசோதனை, நீர்ப் பரிசோதனை மற்றும் ஆலோசனை வழங்குவதற்காக வேளாண் பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. தொடக்க கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்தும், தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்திலிருந்தும் 50:50 என்ற பங்களிப்பில் ஒவ்வொன்றும் ரூ.6 இலட்சம் செலவில் 190 வேளாண் பாதுகாப்பு மையங்கள் துவங்கப்பட்டுள்ளன.

### (xiii) வேளாண் சேவை மையங்கள்

விவசாயத்தில் உற்பத்தி திறனை அதிகரிப்பதற்கும், முக்கியமான பருவ காலங்களில் வேளாண் பணிகளில் ஏற்படும் ஆட்கள் பற்றாக்குறையை சமாளிப்பதற்கும், நியாயமான வாடகையில் வேளாண் இயந்திரங்கள் வழங்குவதற்கும், 2,104 வேளாண்மை சேவை மையங்கள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இதன்மூலம் விவசாயத்தில் இயந்திரமய மாக்குதலின் பயன்பாட்டினை பெற இயலாத நிலையிலுள்ள விவசாயிகள் குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் இவ்வசதியினை பயன்படுத்தி, தங்கள் விவசாய உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை உயர்த்திக்கொள்ள வழிவகுத்துள்ளது. இந்த வேளாண் சேவை மையங்கள், டிராக்டர்கள், மினி டிராக்டர்கள், பவர்டில்லர், நெல் நடவு இயந்திரங்கள் மற்றும் இதர இயந்திரங்களை வாடகைக்கு வழங்கி வருகின்றன.

இந்த அரசு, வேளாண்மை சேவை மையங்களுக்காக விவசாய கருவிகள் வாங்குவதற்கு 50% மானியமாக, ஒரு கூட்டுறவு சங்கத்திற்கு அதிகபட்சமாக ரூ.20 இலட்சம் என்ற வீதத்தில் வழங்கியது. வேளாண் சேவை மையங்கள், 2017-18ஆம் ஆண்டில் மேற்காணும் விவசாயக் கருவிகளை வாடகைக்கு விட்டதன் மூலமாக, ரூ.1.84 கோடி அளவிற்கு வருமானம் ஈட்டியுள்ளன.

**(xiv) பொதுச் சேவை மையங்கள்**

அரசின் சேவைகளை பொது மக்களுக்கு வழங்குவதை முக்கிய நோக்கமாக கொண்டு பொதுச் சேவை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. பொதுச் சேவை மையங்கள் இதர தனியார் மற்றும் சமூக நலத்துறையால் வழங்கப்படும் சேவைகளையும் வழங்கி வருகின்றன. சாதிச் சான்று, வருமானச் சான்று, பிறப்பு / இறப்புச் சான்று, பட்டா, சிட்டா, ஈ.வே.ரா மணியம்மை நினைவு திருமண உதவி

திட்டம், மின்கட்டணம் செலுத்துதல், காப்பீட்டு பிரிமியம் செலுத்துதல், அலைபேசி ரீசார்ஜ், டிஜிட்டல் புகைப்படம் எடுத்தல், மின்னணு பயணச்சீட்டு பதிவு செய்தல் போன்ற சேவைகளை இம்மையங்கள் வழங்கி வருகின்றன. கூட்டுறவு நிறுவனங்களில் 4,407 பொதுச் சேவை மையங்கள் பல்வேறு மின்னணு சேவை வழங்கும் பொருட்டு அமைக்கப்பட்டுள்ளன. இம்மையங்களின் மூலம் 2017-18 ஆம் ஆண்டில் 76,17,521 சேவைகள் கிராம மற்றும் நகர்ப்புற மக்களுக்கு வழங்கப்பட்டு, ரூ.28.39 கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

**2.5 2017-18 ஆம் ஆண்டில் கூட்டுறவுச் சங்கங்களின் உட்கட்டமைப்பை வலுப்படுத்துதல்**

**(i) கூட்டுறவு நிறுவனங்களுக்கு சொந்த கட்டடம் கட்டுதல்**

அனைத்து கூட்டுறவு நிறுவனங்களும் சொந்த கட்டடத்தில் செயல்பட வேண்டும் என்ற இலக்கை எய்தும் வகையில், 2017-18 ஆம் ஆண்டில், மாண்புமிகு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 115 கூட்டுறவு நிறுவனங்களுக்கு, புதிய கட்டடங்கள் ரூ.23.80 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. இக்கட்டடங்களின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

**(ii) கூட்டுறவு வங்கிகளில் புதிய கிளைகள் துவக்குதல்**

கூட்டுறவு வங்கிகளின் வாடிக்கையாளர்களின் அருகிலேயே வங்கிச் சேவையினை வழங்குவதற்கு ஏதுவாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் 2017-18ஆம் ஆண்டில், 2 மத்திய கூட்டுறவு வங்கிகளில் 15 புதிய கிளைகள் ரூ.2.25 கோடி மதிப்பீட்டில் துவக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. மேலும், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால், சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் 3 புதிய கிளைகள் ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் துவக்கப்படும் என அறிவிக்கப்பட்டது. கிளை துவக்குவதற்கான பணிகள் 4 கிளைகளில் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய 14 கிளைகளில் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

### (iii) கூட்டுறவு வங்கிகளை நவீனமயமாக்குதல்

கூட்டுறவு நிறுவனங்களின் தோற்றப் பொலிவினை மேம்படுத்தவும் வாடிக்கையாளர்களின் நன்மதிப்பினைப் பெறவும், 2017-18 இல், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், 27 கூட்டுறவு நிறுவனங்கள் ரூ.3.40 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும் என சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டது. 2 கூட்டுறவு நிறுவனங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய கூட்டுறவு நிறுவனங்களில் பணிகள் நடைபெற்று வருகிறது.

### (iv) பாதுகாப்பு நடவடிக்கைகள்

### (அ) உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள்

கூட்டுறவு நிறுவனங்களின் பாதுகாப்பினை வலுப்படுத்தும் நோக்குடன் 4,160 கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் நிறுவப்பட்டுள்ளன.

மேலும், இதர கூட்டுறவு நிறுவனங்களில் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பு நிழற்படக் கருவிகள் விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதால், அனைத்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் உட்சுற்று தொலைக்காட்சி கண்காணிப்பில் இருக்கும்.

**ஆ) பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை**

கூட்டுறவு நிறுவனங்களில் பாதுகாப்பு வசதிகள் மற்றும் உட்கட்டமைப்புகள் மேம்படுத்த மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களால் 2017-18 ஆம் ஆண்டில், 62 கூட்டுறவு நிறுவனங்களில் உயர்தர பாதுகாப்பு பெட்டகம், வாடிக்கையாளர் பாதுகாப்பு பெட்டகம், பாதுகாப்பு கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை மற்றும் பாதுகாப்பு கதவுகள், ரூ.253.42 இலட்சத்தில் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இதில், 54 கூட்டுறவு நிறுவனங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 8 கூட்டுறவு நிறுவனங்களில் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

## 3. நீண்டகாலக் கடன் அமைப்பு

நீண்ட கால கூட்டுறவு கடன் அமைப்பானது, மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியையும், வட்ட / வட்டார அளவில் 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளையும் உள்ளடக்கியதாகும். இக்கடன் நிறுவனங்கள், கிராமப்புற மக்களின் விவசாயம் சார்ந்த மற்றும் விவசாய சாராத நீண்டகாலக் கடன் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

### 3.1 தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் திருத்தப்பட்ட கொள்கை வழிகாட்டுதலின்படி, தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற இயலாத

காரணத்தினால், வங்கியின் கடன் வழங்கும் பணிகள் பாதிக்கப்பட்டது. இருப்பினும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி, தனது சொந்த நிதி ஆதாரத்தை கொண்டு, தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் தொடர்ந்து கடன் வழங்க நிதி உதவி அளித்து வருகிறது. இவ்வங்கியின் பங்கு மூலதனம் 31.03.2018 அன்று உள்ளபடி, ரூ.41.06 கோடியாகவும், வைப்புகள் ரூ.158.27 கோடியாகவும் உள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி தனது கிளைகள் மூலம், 2017-18 ஆம் ஆண்டில், ரூ.241.00 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளது.

### 3.2 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள்

மாநிலத்தில் 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள், சிறு பாசனம்,

நில மேம்பாடு, பண்ணை இயந்திரமயமாக்கல், தோட்டக்கலை, கால்நடை வளர்ப்பு மற்றும் இதர பணிகளுக்கு நீண்ட காலக் கடன்கள் வழங்கி வந்தன. தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி கிடைக்கப் பெறாத நிலையில், இவ்வங்கிகள் தங்களிடம் உள்ள சொந்த நிதியிலிருந்து நகைக்கடன்களை வழங்கி வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், இவ்வங்கிகள் ரூ.986.77 கோடி அளவிற்கு நகைக்கடன்கள் வழங்கியுள்ளன.

## 4. நகர கூட்டுறவு கடன் நிறுவனங்கள்

நகர கூட்டுறவு கடன் அமைப்பானது நகர கூட்டுறவு வங்கிகள் மற்றும் நகர கூட்டுறவு கடன் சங்கங்களை உள்ளடக்கியதாகும்.

### 4.1. நகரக் கூட்டுறவு வங்கிகள்

தமிழ்நாட்டில் 128 நகர கூட்டுறவு வங்கிகள் இயங்கி வருகின்றன. இவ்வங்கிகள் நகர் மற்றும் புற நகர் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கியியல்

சேவை மற்றும் கடன் வழங்கும் பணியினை செய்து வருகின்றன. பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக் கடன், வணிகக் கடன் மற்றும் இதர பண்ணை சாராக் கடன்களை வழங்கி வருகின்றன. **2016-17ஆம் ஆண்டில், நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் வழங்கப்பட்ட ரூ.5,391.72 கோடி கடன், 2017-18ஆம் ஆண்டில், ரூ.5,577.13 கோடியாக உயர்ந்துள்ளது.** 31.03.2018 தேதியில் நகரக் கூட்டுறவு வங்கிகளின் வைப்புத் தொகை ரூ.7,897.50 கோடியாக உள்ளது. 2017-18 ஆம் ஆண்டில், நகர கூட்டுறவு வங்கிகள், நகர்ப்புறத்திலுள்ள 1,370 சிறு வணிகர்களை கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.65.18 கோடி கடன் வழங்கியுள்ளன. இதன் மூலம் சிறுவணிகர்கள், தனியாரிடம் அதிக வட்டிக்கு கடன் பெறுவதைத் தவிர்க்க இவ்வங்கிகள் உதவி புரிந்து வருகின்றன.

வங்கிகளின் செயல்பாட்டு திறனை மேம்படுத்தவும், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையினை வழங்கும் பொருட்டும் அனைத்து நகர

கூட்டுறவு வங்கிகளிலும் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவை அமல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

## 4.2 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள்

நகர கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு கடன் வழங்கும் பணியினை செய்து வருகின்றன. நாளது தேதியில் மாநிலத்தில் 103 நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன. இச்சங்கங்கள் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று, சிறு வணிகர்கள், கைவினைக் கலைஞர்கள் மற்றும் நடுத்தர வருவாய் பிரிவினருக்கு, வீட்டுவசதிக்கடன், வணிகக் கடன் மற்றும் பண்ணை சாராக் கடன்களை வழங்கி வருகின்றன. 2016-17ஆம் ஆண்டில், நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக வழங்கப்பட்ட ரூ.1,100.94 கோடி கடன், 2017-18ஆம் ஆண்டில், ரூ.1,208.07 கோடியாக உயர்ந்துள்ளது. இச்சங்கங்களின்

வைப்புத்தொகை 31.03.2018 தேதியில் ரூ.1,286.07 கோடியாக உள்ளது. நகர கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர்புறத்திலுள்ள 479 சிறு வணிகர்களை கொண்ட கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு ரூ.17.39 கோடி கடன் வழங்கியுள்ளன.

## 5. பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணயச் சங்கங்கள்

மாநிலத்தில் 1,727 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள் மத்திய மற்றும் மாநில அரசுப் பணியாளர்கள், அரசு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனப் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தவும், உறுப்பினர்களுக்கு நியாயமான வட்டியில் கடன் வழங்குவதையும் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. இச்சங்கங்கள் 31.03.2018 தேதியில் ரூ.2,140.07 கோடி பங்குத் தொகையுடனும்,

நடைமுறை மூலதனமாக ரூ.13,214.88 கோடியுடனும், உறுப்பினர்களுக்கு 2017-18-ஆம் ஆண்டில், ரூ.6,500.36 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கியும் செயல்பட்டு வருகின்றன.

# இயல் –II

## கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள்

### 1. முன்னுரை

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களின் விற்பனையில் இன்றியமையாத பங்காற்றுகின்றன. சங்க உறுப்பினர்கள் மற்றும் நுகர்வோர் / வணிகர்கள் ஆகியோரை நேரடியாக இணைத்து அதன் மூலம் இடைத் தரகர்கள் / முகவர்களின் தலையீட்டினை நீக்கி, உறுப்பினர்களின் வேளாண் விளைபொருட்களை சரியான விலைக்கு சந்தைப்படுத்துவதற்கான சூழலை ஏற்படுத்துகின்றன. இச்செயல்பாடு விவசாயிகள் மற்றும் நுகர்வோரின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்கின்றது. இத்துடன், விற்பனைச் சங்கங்கள், இடுபொருட்களை விநியோகித்தும், விளைபொருட்களின் மீது தானிய ஈட்டுக்கடன்

வழங்கியும், வேளாண் விளைப்பொருட்களைப் பதனிடும் பணியினையும் மேற்கொண்டு வருகின்றன. மேலும், நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்யும் முதன்மைச் சங்கங்களாக செயல்படுவதுடன் நியாயவிலைக் கடைகளையும் நடத்தி வருகின்றன. மாநிலத்தில் 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் வட்டம் மற்றும் வட்டார அளவில் செயல்பட்டு வருகின்றன.

**1.2** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED), தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் நீலகிரி ஆகிய மாவட்டங்கள் நீங்கலாக, மாநிலத்தில் உள்ள இதர மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய டெல்டா

மாவட்டங்களில் செயல்படும் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல அளவிலான இணையமாக செயல்பட்டு வருகிறது. நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மற்றும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உள்ள மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது.

**2. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (TANFED)**

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், 20.02.1959 முதல் செயல்படத் தொடங்கியது. இவ்விணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலமாக விவசாயிகளுக்குத் தேவையான விவசாய இடுபொருட்களான விதை, உரம், பூச்சிக்கொல்லி

மருந்து மற்றும் வேளாண் உபகரணங்கள் ஆகியவற்றை விநியோகித்து வருகிறது.

**2.1.** 2017-18 ஆம் ஆண்டில், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் ரூ.442.60 கோடி மதிப்பிலான 3,32,057 மெட்ரிக் டன் உரங்கள் மற்றும் ரூ.11.25 கோடி மதிப்பிலான பூச்சிக்கொல்லி மருந்துகளை விநியோகம் செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமான, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள பாமணி உரக்கலவை ஆலையில் உற்பத்தி செய்யப்படும் 17:17:17 என்ற உரக்கலவைக்கு பல மாவட்டங்களில் நல்ல வரவேற்பு உள்ளது. 2016-17 ஆம் ஆண்டில், ரூ.12.29 கோடி மதிப்பிலான 6,701 மெ.டன் பாமணி உரங்கள் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளது. இது **2017-18 ஆம் ஆண்டில், ரூ.15.42 கோடி மதிப்பு மற்றும் 8,512 மெ.டன் அளவிற்கு உயர்ந்துள்ளது.**

**2.2** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்திற்கு சொந்தமாக 32,140 மெ.டன் கொள்ளளவு கொண்ட 41 கிடங்குகளும், சென்னை கோயம்பேடு வணிக வளாகத்தில், 2,500 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்றும், பேசின்பிரிட்ஜ் பகுதியில் 625 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்பதனக் கிடங்கு ஒன்றும் என இரு குளிர்பதனக் கிடங்குகள் உள்ளன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுடன் இணைந்து விவசாயிகளின் வேளாண் விளைபொருட்களை சந்தைப்படுத்திட, வணிகரீதியிலான ஆதரவை அளித்து வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில், ரூ.61.83 கோடி மதிப்பிலான வேளாண்விளை பொருட்கள் இணையத்தால் சந்தைப்படுத்தப்பட்டுள்ளன.

**2.3** தமிழ்நாட்டில் ஆதரவு விலைத் திட்டத்தினை செயல்படுத்திட தேசிய வேளாண்மை கூட்டுறவு

விற்பனை இணையத்தின் (NAFED) முகவராக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் செயல்பட்டு வருகிறது.

**2.4** தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், பால் உற்பத்தியாளர்களுக்கு விநியோகம் செய்வதற்காக மாட்டுத் தீவனத்தை ஆவின் நிறுவனத்திற்கு விநியோகம் செய்து வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில், ரூ.60.58 கோடி மதிப்பிலான 33,270.100 மெட்ரிக் டன் மாட்டுத் தீவனம் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**2.5** இந்திய எண்ணெய் கழகத்துடன் இணைந்து கோயம்பேடு வணிக வளாகத்தில் ஒரு பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையத்தினையும், கோடம்பாக்கத்தில் ஒரு பெட்ரோல் விற்பனை நிலையத்தினையும் நடத்தி வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில், ரூ.21.75 கோடி மதிப்பிலான பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**3. தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் (TCMF)**

தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மண்டலங்களில் உள்ள 12 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் மண்டல இணையமாக செயல்பட்டு வருகிறது. இவ்விணையம், உரங்கள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகள் ஆகியவற்றை விற்பனை செய்து வருகிறது. மேலும், உறுப்பினர்களுக்கு நகைக்கடனையும் வழங்கி வருகிறது. அச்சகம் ஒன்றையும் இணையம் நடத்தி வருகிறது. இணையத்திற்கு சொந்தமாக 7,200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 12 கிடங்குகள் உள்ளன. 2017-18 ஆம் ஆண்டு, ரூ.29.58 கோடி மதிப்பிலான 36,491 மெட்ரிக் டன் உரங்களை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பனை செய்துள்ளது. இது 2016-17 ஆம் ஆண்டில், ரூ.26.49 கோடி மதிப்பிலான 36,219 மெ.டன் அளவைவிட கூடுதலாகும். 2016-17 ஆம் ஆண்டில்,

ரூ.66.05 கோடியாக இருந்த இணையத்தின் மொத்த வணிகம், **2017-18 ஆம் ஆண்டில், ரூ.76.27 கோடியாக உயர்ந்துள்ளது.**

**4. நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்(NCMS)**

நீலகிரி வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம், நீலகிரி மாவட்டம் மற்றும் கோயமுத்தூர் மாவட்டத்தில் மேட்டுப்பாளையம் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியினையும் செயல் எல்லையாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது. இச்சங்கம், விவசாயிகள் விளைவிக்கும் உருளைக்கிழங்கு, முட்டைகோஸ், காரட், பீட்ரூட் மற்றும் பீன்ஸ் ஆகியவற்றை ஆதாய விலைக்கு விற்பனை செய்வதோடு, அவர்களுக்குத் தேவையான வேளாண் இடுபொருட்களையும் வழங்கி வருகிறது. இச்சங்கத்திற்கு சொந்தமாக, மேட்டுப்பாளையத்தில் உரக்கலவை அலகு ஒன்று உள்ளது. இச்சங்கம் சமையல் எரிவாயு

முகமையாகவும் செயல்பட்டு வருகிறது. 2016-17 ஆம் ஆண்டில், ரூ.72.12 கோடியாக இருந்த சங்கத்தின் மொத்த வணிகம், **2017-18 ஆம் ஆண்டில், ரூ.75.12 கோடியாக உயர்ந்துள்ளது.**

## 5. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் (APCMS)

தமிழ்நாட்டில், 112 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், வேளாண் விளைபொருட்களைச் சந்தையிடுதல், உரம் மற்றும் இதர விவசாய இடுபொருட்களை விற்பனை செய்தல் ஆகியவற்றை முதன்மை நோக்கங்களாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றன. பெரும்பான்மையான விற்பனைச் சங்கங்கள், முதன்மைச் சங்கங்களாக செயல்பட்டு, அத்தியாவசியப் பொருட்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு நகர்வு செய்கின்றன. மேலும், நியாய விலைக் கடைகளையும் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் நடத்தி வருகின்றன. 2016-17 ஆம் ஆண்டில், ரூ.2,183.07 கோடியாக இருந்த

இச்சங்கங்களின் மொத்த வணிகம், **2017-18 ஆம் ஆண்டில், ரூ.2,293.36 கோடியாக உயர்ந்துள்ளது.**

## 5.1 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் செயல்பாடுகள்

### (i) வேளாண் விளைபொருள் விற்பனை

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள், தனது உறுப்பினர்களின் விளை பொருட்களை இலாபகரமான விலைக்கு விற்பதற்கு ஏதுவாக ஏல விற்பனைக் களங்கள், உலர் களங்கள் மற்றும் கிடங்குகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித் தருகின்றன. மேலும், விவசாயிகளுக்கு வேளாண் விளை பொருட்களின் சந்தை நிலவரங்களை அளிப்பதுடன், வேளாண் விளைபொருட்களுக்கான சந்தையை ஏற்படுத்தி கொடுக்கின்றன. சில சங்கங்கள், வேளாண் விளை பொருட்களை பதப்படுத்துவதற்கும் மற்றும் மதிப்புக் கூட்டுவதற்கும் நேரடியாக கொள்முதல் செய்கின்றன. 2016-17 ஆம் ஆண்டில், ரூ.886.91 கோடியாக இருந்த வேளாண் விளைபொருள்

விற்பனை **2017-18 ஆம் ஆண்டில், ரூ.929.06 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.**

**(ii) விற்பனையுடன் இணைந்த கடன் திட்டம்**

இத்திட்டத்தின் கீழ், கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாய உறுப்பினர்களின் விவசாய விளை பொருட்களை ஆதாய விலைக்கு விற்பனை செய்து, பெறப்படும் தொகையினை, உறுப்பினர்கள் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களில் பெற்ற கடனுக்கு ஈடு செய்யும் வகையில் ஒருங்கிணைந்து செயல்படுகின்றன. சந்தைப்படுத்துவதற்கான வசதியினை ஏற்படுத்தி கொடுத்ததன் மூலம், 2016-17 ஆம் ஆண்டில், ரூ.2.99 கோடி **அள**விற்கு, உறுப்பினர்களின் கடன் ஈடுகட்டப்பட்டுள்ளது. இது **2017-18 ஆம் ஆண்டில், ரூ.3.28 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.**

**(iii) தானிய ஈட்டுக் கடன்**

அறுவடைக் காலங்களில், விவசாயிகள் தங்களது வேளாண் விளைபொருட்களை, அவசர பணத் தேவைகளுக்காக மிகக்குறைந்த விலைக்கு விற்பனை செய்வதைத் தவிர்க்க, கூட்டுறவு விற்பனைச்

சங்கங்கள் வாடகை அடிப்படையில் சேமிப்பு வசதி அளித்து, விளை பொருட்களின் சந்தை மதிப்பில், 80 சதவிகிதம் வரை தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கி வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ரூ.87.75 கோடி அளவிற்கு தானிய ஈட்டுக்கடன்கள் வழங்கியுள்ளன.

**(iv) நகைக்கடன் வழங்குதல்**

விவசாய உறுப்பினர்களின் அவசர பொருளாதாரத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், 2017-18 ஆம் ஆண்டில், ரூ.300.47 கோடி அளவிற்கு வேளாண்மை உற்பத்தியாளர்களுக்கு கூட்டுறவு விற்பனைச் சங்கங்களால் நகைக்கடன் வழங்கப்பட்டுள்ளது.

**(v) தரமான விதைகள் விற்பனை**

அதிக மகசூல் மற்றும் மேம்பட்ட தரமான வேளாண் உற்பத்திக்கு, தரமான விதைகள் கிடைக்கச் செய்வது மிக இன்றியமையாததாகும். நெல், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்கள், சிறு தானியங்கள்

மற்றும் காய்கறிகள் ஆகியவற்றின் தரமான விதைகளைக் கூட்டுறவுச் சங்கங்கள் கொள்முதல் செய்து விவசாயிகளுக்கு விற்பனை செய்து வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், ரூ.5.07 கோடி மதிப்பிலான விதைகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(vi) உர விநியோகம்**

வேளாண் உற்பத்தியை அதிகரித்திட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், விவசாயிகளுக்கு உரங்களை, ரொக்கத்திற்கு விற்பனை செய்வதுடன், யூரியா, டி.ஏ.ப்பி., பொட்டாஷ் போன்ற உரங்களை பயிர்க்கடனில் ஒரு பகுதியாகவும் வழங்கி வருகின்றன. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் மற்றும் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவை கூட்டுறவுச் சங்கங்களுக்கான மொத்த உர விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றன. 2016-17 ஆம் ஆண்டில், கூட்டுறவு

விற்பனை நிலையங்கள் மூலம், ரூ.437.37 கோடி மதிப்பிலான 3,47,693 மெ.டன் உரங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில், 1,32,764.350 மெ.டன் அளவிற்கு யூரியா மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில், உரங்களின் விற்பனை அதிகரித்து ரூ.492.26 கோடி மதிப்பிலான 3,85,732 மெ.டன் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. இதில், 1,40,016 மெ.டன் அளவிற்கு யூரியா மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### 5.2 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் செயல்படுத்தி வரும் சிறப்புத் திட்டங்கள்

**(i) சூரியசக்தி கொப்பரை உலர்கலன்கள் அமைத்தல்**

தென்னை விவசாயிகள் பயனுறும் வகையில், 10 மாவட்டங்களில், 28 சூரிய சக்தி கொப்பரை உலர்கலன்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வலகுகள், தேங்காயைக் குறைந்த செலவில், குறைந்த கால

அளவில் தரமான கொப்பரையாக மாற்றுகின்றன. 2017-18ஆம் ஆண்டில், 7,91,490 தேங்காய்கள் கொப்பரையாக மாற்றப்பட்டுள்ளன.

**(ii) கணினி எடைமேடைகள் அமைத்தல்**

விவசாய பெருமக்கள் மற்றும் வணிகர்களின் வேளாண் விளைபொருட்கள் துல்லியமாக எடையிடப்படுவதை உறுதிப்படுத்திட பெருந்துறை, பவானி, உசிலம்பட்டி, நீலகிரி, துறையூர், பரமக்குடி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், மொத்தம் ரூ.1.42 கோடி மதிப்பீட்டில் கணினி எடைமேடைகள் நிறுவப்பட்டுள்ளன. இதனால் இந்த மண்டலங்களில் உள்ள விவசாயிகள் மற்றும் வியாபாரிகள் பெரிதும் பயனடைந்துள்ளனர்.

**(iii) ஏலமுறை நவீனப்படுத்துதல்**

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் ஏலத்தினை துரிதமாகவும், ஒளிவுமறைவற்ற முறையிலும் நடத்திட ஏதுவாக

சேலம், ஆத்தூர், ஈரோடு, பெருந்துறை மற்றும் திருச்செங்கோடு ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், ரூ.43.35 இலட்சம் மதிப்பில் மென்பொருள் பொருத்தப்பட்டு ஏலமுறை நவீனப்படுத்தப்பட்டுள்ளது.

**(iv) உலர்களங்கள் அமைத்தல்**

ஆலங்குடி, திருமயம், அறந்தாங்கி, திருமங்கலம், பென்னாகரம், கமுதி, தென்காசி, அவிநாசி, உடுமலைப்பேட்டை, கள்ளக்குறிச்சி மற்றும் திருச்செங்கோடு (கொங்கனாபுரம் கிளை) ஆகிய 11 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், 2014-15 முதல் 2016-17 வரையிலான ஆண்டுகளில் மொத்தம் ரூ.111.35 இலட்சம் மதிப்பில் உலர்களங்கள் கட்டப்பட்டுள்ளன. இவ்வுலர்களன்கள், வேளாண் பெருமக்களின் விளைபொருட்களை உலரவைத்து, தரம் பிரித்து, ஆதாய விலையில் விற்பதற்கு உதவுகின்றன.

**(v) விவசாயிகள் தங்கும் விடுதி புனரமைத்தல் மற்றும் சாலைவசதி ஏற்படுத்துதல்**

திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின், கொங்கனாபுரம் கிளையில், வணிக வளாகம் மற்றும் விவசாயிகள் தங்கும் விடுதி ரூ.17.75 இலட்சம் மதிப்பில் புனரமைக்கப்பட்டது. மேலும், மேற்படிக் கிளையில் விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கொண்டு வர ஏதுவாக ரூ.25 இலட்சம் மதிப்பில் சாலை வசதி மேம்படுத்தப்பட்டுள்ளது.

**(vi) விதை சுத்திகரிப்பு இயந்திரம் நிறுவுதல்**

தரமான விதைகளை விவசாயிகளுக்கு விநியோகிக்க ஏதுவாக, துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனத்தில் ரூ.19.13 இலட்சம் மதிப்பிலும், கும்பகோணம் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் ரூ.10 இலட்சம் மதிப்பிலும் விதை சுத்திகரிப்பு இயந்திரங்கள் நிறுவப்பட்டுள்ளன. 2017-18 ஆம்

ஆண்டில், 298.520 மெட்ரிக் டன் அளவிற்கு விதைகள் சுத்திகரிக்கப்பட்டுள்ளன.

### (vii) வேளாண் விளை பொருட்களைப் பதனிடுதல் மற்றும் அதன் மதிப்பினைக் கூட்டுதல்

சில கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பஞ்சு அரவை அலகுகள், பயறு உடைக்கும் அலகுகள், மிளகாய் மற்றும் மஞ்சள் அரவை அலகுகள், குங்குமம் தயாரிக்கும் அலகுகள், எண்ணெய் பிழியும் அலகுகள், அரிசி ஆலைகள், நிலக்கடலை உடைக்கும் அலகுகள், பஞ்சு பொதியிடும் அலகுகள், சாமை, வரகு, புளி பதனிடும் அலகுகள் மற்றும் உறையிடும் அலகுகள் ஆகிய பதனிடும் அலகுகளை நடத்தி வருகின்றன. இப்பதனிடும் அலகுகள் வேளாண் பொருட்களின் மதிப்பினைக் கூட்டி உற்பத்தியாளர்களுக்கு நல்ல விலை கிடைக்க வழிவகை செய்து வருகின்றன.

ஒரு புதிய முயற்சியாக 2014 முதல் 2017 வரை ரூ.195.84 இலட்சம் மதிப்பிலான 19 பதனிடும் அலகுகள், 17 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மற்றும்

பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கங்களில் நிறுவப்பட்டுள்ளன. 2017-18 ஆம் ஆண்டில் 941.824 மெட்ரிக் டன் அளவிற்கு விளைபொருட்கள் பதனிடப்பட்டுள்ளன. இது 2016-17ஆம் ஆண்டில் பதனிடப்பட்ட 501.986 மெ.டன் அளவைவிட கூடுதலாகும்.

**viii) உரக்கலவை இயந்திரம் நிறுவுதல்**

நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் 2008 ஆம் ஆண்டு முதல் உரக்கலவையினை தயாரித்து வருகிறது. உரக்கலவை உற்பத்தியை அதிகரித்திட நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் மேட்டுப்பாளையம் கிளையில் ரூ.15 இலட்சம் மதிப்பில் ஒரு புதிய உரக்கலவை இயந்திரம் நிறுவப்பட்டுள்ளது. 2017-18 ஆம் ஆண்டில், 16,808.50 மெட்ரிக் டன் அளவிலான உரக்கலவை உற்பத்தி செய்யப்பட்டு ரூ.21.43 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(ix) சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் அலகு அமைத்தல்**

மின்கட்டணத்தை குறைத்திடவும், இயற்கை சூழல் பாதுகாப்போடு போதிய மின்சாரம் பெறவும், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தலைமை அலுவலகம் மற்றும் சுயசேவைப் பிரிவு ஆகியவற்றில் 2016-17ஆம் ஆண்டில் ரூ.20 இலட்சம் மதிப்பில் சூரிய ஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் அலகுகள் நிறுவப்பட்டுள்ளன.

### (x) மின்னணு ஏல முறை (e-Trading)

வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் விவசாயிகளுக்கு வழங்கும் சேவைகளை செம்மைப்படுத்தும் பொருட்டு திருச்செங்கோடு, ஆத்தூர், சேலம், ஈரோடு, பெருந்துறை, அவிநாசி, இராசிபுரம் மற்றும் நீலகிரி ஆகிய 8 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில், விவசாய விளைபொருட்களை மின்னணு ஏலமுறை மூலம் விற்பனை செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளது. வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியின் (NABARD) நிதியுதவியுடன், மேற்படி சங்கங்களில் 2017-18 ஆம் ஆண்டில், ரூ.35.62 கோடி மதிப்பீட்டில் மின்னணு ஏல முறையை (e-Trading) நடைமுறைப்படுத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(xi) தொடர் சங்கிலி மேலாண்மைத் திட்டம் (Supply Chain Management)**

**2017-18** ஆம் ஆண்டில் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை, தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியுடன் (NABARD) இணைந்து, பழங்கள், காய்கறிகள் மற்றும் இதர அழுகக்கூடிய விளைபொருட்களை, விற்பனை செய்திடும் பொருட்டு சேகரிப்பு மையங்கள் (Collection Points) நிறுவுவதற்காக கிருஷ்ணகிரி, தருமபுரி, கோயம்புத்தூர், நீலகிரி, திருச்சிராப்பள்ளி, திண்டுக்கல், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் தேனி ஆகிய 10 மாவட்டங்களைத் தெரிவு செய்துள்ளது. பழனி மற்றும் கமுதி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் பிரதான சந்தைகள் (Main Markets) அமைப்பதற்கும், துறையூர், பென்னாகரம் மற்றும் நீலகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் தொடக்கநிலை செயலாக்க மையங்கள் (Primary Processing Centres) அமைப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**(xii) ஊரகப் பகுதிகளில் கிடங்கு வசதியை நீட்டித்து விரிவுப்படுத்துதல்**

ஒரு சிறப்பு முயற்சியாக, ஊரகப் பகுதிகளில் சேமிப்பு வசதியை மேம்படுத்திட, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 3,876 கிடங்குகளை ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி மற்றும் சேமிப்பு கிடங்கு உட்கட்டமைப்பு நிதி உதவியுடன் கட்டுவதற்கு, அரசு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொண்டதன் விளைவாக, தற்போது, 3,858 கிடங்குகள் கட்டி முடிக்கப்பட்டும் 18 கிடங்குகளின் கட்டுமானப் பணி பல்வேறு முன்னேற்ற நிலையிலும் உள்ளன.

**(xiii) அலுவலகக் கட்டடங்கள் கட்டுதல்**

வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கான சேவையை மேம்படுத்தும் பொருட்டு, 2014-15 முதல் 2016-17 வரையிலான ஆண்டுகளில், திருவண்ணாமலை, போளூர், செங்கம், காரமடை,

மேட்டுப்பாளையம், திருமங்கலம், பேரையூர், வாடிப்பட்டி, தேனி (தலைமை அலுவலகம் மற்றும் பெரியகுளம் கிளை) காவேரிப்பட்டினம், கிருஷ்ணகிரி மற்றும் திருச்செங்கோடு ஆகிய சங்கங்களில் மொத்தம் ரூ.3.69 கோடி மதிப்பில் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. மேலும், 2016-17 மற்றும் 2017-18 ஆம் ஆண்டுகளில், திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் (தலைமை அலுவலகம், கொங்கனாபுரம் கிளை மற்றும் மல்லசமுத்திரம் கிளை) பட்டுக்கோட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவற்றில் மொத்தம் ரூ.25.25 இலட்சம் மதிப்பில் அலுவலகக் கட்டடங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன.

**(xiv) பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டுதல்**

நகைக்கடனுக்கு ஈடாக வைக்கப்படும் உறுப்பினர்களின் நகைகளின் பாதுகாப்பினை உறுதி

செய்யும் பொருட்டு, 2013-14 முதல் 2015-16 வரையிலான ஆண்டுகளில், மொத்தம் ரூ.2.47 கோடி மதிப்பில் 40 பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறைகள் கட்டப்பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சொத்தினை பாதுகாக்கும் பொருட்டு, திருமங்கலம், வாடிப்பட்டி, உசிலம்பட்டி, பேரையூர் மற்றும் மேலூர் ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 2015-16 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.75.50 இலட்சம் மதிப்பில் சுற்றுச்சுவர் கட்டப்பட்டுள்ளது.

**(xv) வாகனங்கள் வாங்குதல்**

கட்டுப்பாட்டுப் பொருட்கள் மற்றும் கட்டுப்பாடற்றப் பொருட்களை விநியோகம் செய்வதற்கு திருச்செங்கோடு மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் மொத்தம் ரூ.24.62 இலட்சம் மதிப்பில் இரு வாகனங்கள் வாங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

# இயல்-III

# நுகர்வோர் கூட்டுறவுகள்

## 1. முன்னுரை

தமிழ்நாட்டில் நுகர்வோர் கூட்டுறவுகள், மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தையும், மாவட்ட அளவில் 34 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளையும் மற்றும் களஅளவில் 370 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளையும் உள்ளடக்கிய மூன்றடுக்கு அமைப்பாக செயல்பட்டு வருகின்றன. நுகர்வோர் கூட்டுறவுகள் பொதுமக்களுக்கு அத்தியாவசிய நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்குவதை முதன்மை நோக்கமாக கொண்டு, விலை உயர்வை கட்டுப்படுத்துவதில் உதவி புரிகின்றன.

## 2. நடவடிக்கைகள்

**2.1.** தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள், தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளின் தலைமை நிறுவனமாக செயல்பட்டு இணைப்புச் சங்கங்களுக்குத் தேவையான அத்தியாவசிய நுகர்பொருட்களை கொள்முதல் செய்யும் ஒருங்கிணைப்பு முகமையாகவும் செயல்பட்டு வருகின்றது.

**2.2.** கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளால், 17 பல்பொருள் அங்காடிகள், 61 சுயசேவைப்பிரிவுகள், 48 சிறு பல்பொருள் அங்காடிகள், 61 சில்லரை விற்பனை நிலையங்கள், 53 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள், 86 கூட்டுறவு மருந்தகங்கள், 31 அம்மா மருந்தகங்கள், 7 பெட்ரோல் வழங்கும் நிலையங்கள், 29 சமையல் எரிவாயு வழங்கும் நிலையங்கள் மற்றும் 82 மண்ணெண்ணெய் வழங்கும் மையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

**2.3** தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளால் 25 கூட்டுறவு மருந்தகங்கள், 24 அம்மா மருந்தகங்கள், 14 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மற்றும் 3 பெட்ரோல் வழங்கு நிலையங்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

## 3. செயல்பாடுகள்

கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் உற்பத்தி மையங்கள் மற்றும் தயாரிப்பு நிறுவனங்களிடமிருந்து தரமான நுகர்பொருட்கள், நியாயமான விலையில் நேரடியாக கொள்முதல் செய்யப்படுகின்றன. இவை, நுகர்வோர் கூட்டுறவுகளால் நிர்வகிக்கப்படும் விற்பனை நிலையங்களில் நியாயமான விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் நுகர்பொருட்களை கூட்டுறவு விற்பனைச் சங்கங்களிலிருந்தும் உற்பத்தியாளர்களிடமிருந்தும்

இடைதரகர்களின்றி நேரடியாக கொள்முதல் செய்வதால், கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும் பயனடைகின்றன, நுகர்வோரும் பயன்பெறுகின்றனர்.

2017-18 ஆம் ஆண்டில் அனைத்து நுகர்வோர் கூட்டுறவுகள் வழியாக ரூ. 2,905.14 கோடி மதிப்பிற்கு, நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**4. அம்மா மருந்தகங்கள்**

பொது மக்களுக்கு மருந்து பொருட்களை நியாயமான விலையில் வழங்கும் பொருட்டு 2014-15 ஆம் ஆண்டு அம்மா மருந்தகங்கள் துவக்கப்பட்டன. நாளது தேதியில் 111 அம்மா மருந்தகங்கள் திறக்கப்பட்டு, 32 மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன. அம்மா மருந்தகங்கள் தவிர, 180 கூட்டுறவு மருந்தகங்களும் செயல்பட்டு வருகின்றன. இம்மருந்தகங்கள், நுகர்வோருக்கு 15% வரை தள்ளுபடி விலையில் மருந்துகளை விற்பனை செய்து வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், கூட்டுறவு மற்றும்

அம்மா மருந்தகங்கள் மூலம் ரூ.154.38 கோடி மதிப்பிற்கு மருந்துகள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**5. பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்**

கூட்டுறவுகள் மூலம், சந்தை குறுக்கீட்டு நடவடிக்கையாக, நகர்ப்புற பகுதிகளில், தரமான காய்கறிகளை நியாயமான விலையில் நுகர்வோருக்கு வழங்க ஏதுவாக, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டன. பசுமையான காய்கறிகள், விவசாயிகளின் விளை நிலங்களிலிருந்து, உடனுக்குடன் தொகை செலுத்தி நேரடியாக கொள்முதல் செய்யப்பட்டு, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் விற்பனை செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின்படி, பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் இடைத்தரகரின்றி நுகர்வோர்களையும், விவசாயிகளையும் நேரடியாக இணைக்கின்றன.

மாநிலம் முழுவதும், 3 நகரும் கடைகள் உட்பட 76 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின் மூலம் 32 வகையான தரமான காய்கறிகள், நியாயமான விலையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

**20.06.2013 முதல் 21.06.2018 வரை 35,435 மெட்ரிக் டன் காய்கறிகள் ரூ.103.15 கோடி மதிப்பிற்கு நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது**

# இயல் –IV

# சிறப்பு நோக்கங்களுக்கான கூட்டுறவு நிறுவனங்கள்

விவசாயிகள், பழங்குடியினர் மற்றும் அனைத்து மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் பிரதான நோக்குடன் கூட்டுறவுச் சங்கங்கள் தங்களை பல்வேறு செயல்பாடுகளில் ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. சில சிறப்பு நோக்கங்களுக்காக தொழில் ஒப்பந்த கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு அச்சகங்கள் மற்றும் பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்கள், குறிப்பிட்ட பிரிவு மக்களின், குறிப்பிட்ட தேவையை பூர்த்தி செய்கின்றன.

## (i) பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் (LAMPS)

மலைவாழ் மக்களின் வேளாண் உற்பத்தியை அதிகரித்தல், வேலைவாய்ப்பை அதிகரித்தல், ஒருங்கிணைந்த கடன்திட்டம் மூலம் வருவாயை

அதிகரித்தல் மற்றும் அத்தியாவசிய பொருட்களை விநியோகித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டு பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் வேளாண் இடுபொருட்கள் வழங்குதல், வேளாண் விளைபொருள் விற்பனை செய்ய உதவுதல் மற்றும் சிறப்பங்காடி நடத்துதல் ஆகிய பணிகளையும் செய்து வருகின்றன. தற்போது மாநிலத்தில் 22 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 2016-17 ஆம் ஆண்டில் **ரூ**.92.26 கோடி அளவிற்கு இருந்த வணிகம், **2017-18 ஆம் ஆண்டில் ரூ.123.92 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.**

பழங்குடியின மக்களின் சமூக-பொருளாதார நிலையினை மேம்படுத்தவும், அவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்களுக்கு ஆதாய விலை

கிடைக்கச்செய்யவும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால், பொதுவான வணிக முத்திரையிடப்பட்ட தேன், சாமை, புளி மற்றும் வரகு ஆகிய பொருட்களின் விற்பனை **20.06.2013** அன்று துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின் கீழ், 31.03.2018 வரை 10,971.50 கிலோ தேன், 37,337.500 கிலோ சாமை, 77,258 கிலோ புளி மற்றும் 10,162 கிலோ வரகு ஆகிய பொருட்கள் மொத்தம் ரூ.1,33,36,023 மதிப்பிற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

**(ii) துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம் (TUCAS)**

துடியலூர் கூட்டுறவு விவசாய சேவா ஸ்தாபனம், கோயம்புத்தூர் மாவட்டம், துடியலூரில் செயல்பட்டுவரும் ஒரு சிறப்பு வகை தொடக்க விவசாய கூட்டுறவு நிறுவனமாகும். வேளாண் இடுபொருட்களை விவசாயிகளுக்கு வழங்குவதுடன், இச்சங்கம், உரங்கள், பூச்சி மருந்துகள், விதைகள் மற்றும் வேளாண் கருவிகளை உற்பத்தி செய்து

விநியோகித்தும் வருகிறது. இந்நிறுவனம் பயிர்க்கடன், அடமானக்கடன் மற்றும் நகைக்கடன் போன்ற கடன்களை உறுப்பினர்களுக்கு வழங்கி வருகிறது. 2017-18 ஆம் ஆண்டில் ரூ.1.26 கோடி மதிப்பிற்கு விதைகளை விற்பனை செய்துள்ளது. மேலும், ரூ.44.42 இலட்சம் மதிப்பிற்கு பிற கூட்டுறவு நிறுவனங்களுக்கு வேளாண் கருவிகளை விற்பனை செய்துள்ளது.

### (iii) தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள்

உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பினை ஒப்பந்தப் பணிகள் மூலம் உறுதி செய்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பொருட்டு, தமிழ்நாட்டில் 45 தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் 22,442 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன.

### (iv) கூட்டுறவு அச்சகங்கள்

தமிழ்நாட்டில் 26 மாவட்டங்களில் செயல்பட்டு வரும் கூட்டுறவு அச்சகங்கள், அந்தந்த மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் அச்சுத்

தேவைகளுடன், கூட்டுறவு அச்சகங்கள் இல்லாத, அருகில் உள்ள மாவட்டங்களின் அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றன. இவை தனது செயல் எல்லையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமல்லாது அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், பள்ளிகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் அச்சுப் பணிகளையும் மேற்கொண்டு வருகின்றன. 2016-17 ஆம் ஆண்டில், ரூ.51.60 கோடி மதிப்பிலான அச்சுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது, **2017-18 ஆம் ஆண்டில் ரூ.56.95 கோடி அளவிற்கு உயர்ந்துள்ளது.**

**(அ) கூட்டுறவு அச்சகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்**

திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களின் செயல்பாட்டினை மேம்படுத்திட ஏதுவாக தலா ரூ.50 இலட்சம் மதிப்பீட்டில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு, முறையே 2014 மற்றும் 2017 ஆம் ஆண்டில் அனுமதி

வழங்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்ட கூட்டுறவு அச்சகத்தின் கட்டுமானப்பணிகள் முடிவடைந்து புதிய கட்டடத்தில் தனது பணிகளை மேற்கொண்டு வருகிறது. நாமக்கல் மாவட்ட கூட்டுறவு அச்சகத்தின் கட்டுமானப்பணிகள் நிறைவு பெற்று புதிய கட்டடம் பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது.

**(ஆ) கூட்டுறவு அச்சகங்களை நவீனமயமாக்குதல்**

தனியார் அச்சகங்களுடன் போட்டியிடும் வகையில், சென்னை, வேலூர், சேலம், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்துார் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய பெருநகரங்களில் செயல்பட்டு வரும் 7 கூட்டுறவு அச்சகங்கள் 2013-14 ஆம் ஆண்டில், மொத்தம் ரூ.3.68 கோடி மதிப்பில் நவீனமயமாக்கப்பட்டுள்ளன. நவீனமயமாக்கத்தால் கூட்டுறவுச் சங்கங்கள், அரசு மற்றும் அரசு சார்ந்த

நிறுவனங்களின் பெரும்பான்மையான அச்சுப்பணிகள் தரமான முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அதேபோன்று, 2016-17 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு அச்சகம் (இருப்பு:காரைக்குடி) மற்றும் தஞ்சாவூர் மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களை முறையே ரூ.10 இலட்சம் மற்றும் ரூ.19.22 இலட்சம் மதிப்பில் நவீனமயமாக்கிட அனுமதிக்கப்பட்டது. நவீனமயமாக்கும் பணிகள் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

2017-18 ஆம் ஆண்டில், விருதுநகர், சேலம், கடலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டக் கூட்டுறவு அச்சகங்களை முறையே ரூ.12.45 இலட்சம், ரூ.9.13 இலட்சம், ரூ.30 இலட்சம் மற்றும் ரூ.23 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமயமாக்க உத்தேசிக்கப்பட்டு, நவீனமயமாக்கும் பணிகள் விரைவில் முடிக்கப்படும்.

# இயல்-V

## பொது விநியோகத் திட்டத்தில் கூட்டுறவு

### 1. முன்னுரை

**1.1. அ**னைவருக்கும் உணவு பாதுகாப்பை உறுதிசெய்வதில் பொதுவிநியோகத் திட்டம் முக்கியப் பங்காற்றுகிறது. தமிழகத்தில் பொது விநியோகத் திட்டத்தினை செயல்படுத்துவதில் கூட்டுறவு நிறுவனங்கள் பெரும் பங்காற்றுகிறது. மாநிலத்தில் மொத்தம் **32,827** நியாயவிலைக்கடைகளை கொண்டு ஒரு விரிவான விநியோகத் தொடரமைப்பை கூட்டுறவுகள் உருவாக்கியுள்ளன. அதன் விவரம் கீழ்க்கண்டவாறு:—

| வ. எண் | கூட்டுறவுச் சங்கங்களின் வகைகள் | நியாய விலைக் கடைகளின் எண்ணிக்கை (31.05.2018) |
|---|---|---|
| 1. | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | 24,354 |

| | | |
|---|---|---|
| 2. | **மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை** | 3,272 |
| 3. | **கூட்டுறவு விற்பனைச் சங்கம்** | 2,511 |
| 4. | **தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலை** | 1,909 |
| 5. | **நகர கூட்டுறவு கடன் சங்கம்** | 440 |
| 6. | **பெரும்பலநோக்கு கூட்டுறவு சங்கம்** | 240 |
| 7. | **இதர வகை கூட்டுறவு சங்கம்** | 101 |
| | **மொத்தம்** | 32,827 |

அனைவருக்கும் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும், ஏழை மற்றும் அடித்தட்டு மக்களின் நிலைத்த நீடித்த வளர்ச்சி ஏற்படுவதற்கும் பொதுவிநியோகத்திட்டம் முக்கிய பங்காற்றுகிறது. இத்திட்டம் தொடர்ந்து சிறப்பாக செயல்படுவதை உறுதி செய்யும் விதமாக, நியாய விலை கடைகளை நடத்துவதற்கான நடைமுறை செலவினை தமிழ்நாடு அரசு மானியமாக வழங்கி வருகிறது.

**1.2.** தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து, அத்தியாவசியப் பொருட்களை, நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்யும் பணியை 96 முதன்மைச்சங்கங்கள், அதாவது 28 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், 56 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 10 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும் மற்றும் 2 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மேற்கொண்டு வருகின்றன. இந்த முதன்மைச் சங்கங்கள் 4,178 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாய விலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. இதைத்தவிர, 8 கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைகளும், 31 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 149 தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகளும், 118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களும், 7 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், **7** நகர கூட்டுறவுச் கடன்

சங்கங்களும் மற்றும் 6 இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும் ஆக மொத்தம் 326 கூட்டுறவுச் சங்கங்கள் சுய எடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

## 2. நியாய விலைக் கடைகள்

**2.1.** கூட்டுறவுச் சங்கங்கள் நியாய விலைக்கடைகள் நடத்துவது மட்டுமின்றி, குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்க ஏதுவாக, பிரத்யேகமாக 258 மண்ணெண்ணெய் வழங்கு நிலையங்கள் நடத்தி வருகின்றன. நியாயவிலைக்கடைகள் மூலம், சிறப்பு பொதுவிநியோகத்திட்ட பொருட்களான துவரம் பருப்பு, பாமாயில் ஆகியவை மிக குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றன. கட்டுப்பாடற்ற பொருட்களான ஊட்டி தேயிலை, அம்மா உப்பு போன்றவை நியாயமான விலையில் நியாய விலைக்கடைகளில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

## 3. நகரும் நியாய விலைக் கடைகள்

**3.1.** மலைப்பகுதிகளில் வாழும் மலைவாழ் மக்கள் மற்றும் எளிதில் அணுக இயலாத பகுதிகளில் வாழும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் செய்யும் பொருட்டு, நகரும் நியாய விலைக்கடைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதில், 40 நகரும் நியாய விலைக்கடைகள் மலைப்பகுதிகள் மற்றும் எளிதில் அணுக இயலாத பகுதியிலும், 2 நகரும் நியாய விலைக் கடைகள் சென்னையிலும் செயல்பட்டு வருகின்றன.

## 4. இதர பொருட்களின் விற்பனை

### (i) ஊட்டி தேயிலை விற்பனை

2001 ஆம் ஆண்டில், சிறு தேயிலை விவசாயிகளின் துயர் துடைக்கும் பொருட்டு, இண்ட்கோசர்வ் நிறுவனத்திலிருந்து ஊட்டி தேயிலை கொள்முதல் செய்யப்பட்டு பொதுவிநியோகத்

திட்டத்தின் கீழ், கூட்டுறவு நியாய விலைக் கடைகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. 2014-15 ஆம் ஆண்டு முதல் 2017-18 ஆம் ஆண்டு வரை 11,874 மெட்ரிக் டன் அளவிற்கு ஊட்டி தேயிலை நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**(ii) அம்மா உப்பு விற்பனை**

அயோடின் பற்றாக் குறையால் ஏற்படும் நோய்களிலிருந்து மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு, தமிழ்நாடு உப்பு நிறுவனத்திடமிருந்து, அயோடின் கலந்த உப்பு கொள்முதல் செய்யப்பட்டு, கூட்டுறவுத்துறை நடத்தும் நியாயவிலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்படுகின்றன. 2017-18 இல் 26,399 மெட்ரிக் டன் அளவிற்கு அம்மா உப்பு நியாய விலைக் கடைகள் மூலமாக விற்பனை செய்யப்பட்டுள்ளது.

**5. நியாயவிலைக் கடைகளுக்கு கட்டடங்கள் கட்டுதல்**

கூட்டுறவு சங்கங்கள் மூலம் நடத்தப்படும் **32,827** நியாயவிலைக்கடைகளின் கட்டட விவரம் பின்வருமாறு :—

| வ. எண் | விவரம் | நியாயவிலைக் கடைகளின் எண்ணிக்கை (31.05.2018) |
|---|---|---|
| 1. | **சொந்தக் கட்டடம்** | **3,205** |
| 2. | **அரசுக் கட்டடம்** | **16,827** |
| 3. | **வாடகையில்லா கட்டடம்** | **5,499** |
| 4. | **வாடகைக் கட்டடம்** | **7,296** |
| | **மொத்தம்** | **32,827** |

கடந்த ஏழு ஆண்டுகளில் 1,838 நியாயவிலைக்கடைகளுக்கு புதிய சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டுள்ளன. வாடகை கட்டடங்களில் செயல்படும் நியாயவிலைக் கடைகளுக்கு சொந்தக் கட்டடங்கள் கட்டுவதற்கு, அரசு காலி இடங்கள் கையகப்படுத்தப்பட்டு, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதி, மாண்புமிகு பாராளுமன்ற உறுப்பினர்களின் தொகுதி வளர்ச்சி நிதி, ஊரக வளர்ச்சி நிதி மற்றும் இன்னபிற நிதி ஆதாரங்களைக் கொண்டு பல்வேறு கட்டடங்களில் சொந்தக் கட்டடங்கள் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## 6. நியாயவிலைக் கடைகளை நடத்தும் கூட்டுறவு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அரசு மானியம்

கூட்டுறவுச் சங்கங்கள் சேவை மனப்பான்மையுடன் நியாயவிலைக் கடைகளை நடத்தி வருகின்றன. மேலும், விலையில்லாமல் அல்லது அரசால் நிர்ணயிக்கப்பட்ட விலையிலேயே குடும்ப அட்டைதாரர்களுக்கு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்து வருகின்றன. பொதுவிநியோகத் திட்ட செயல்பாடுகளுக்கு ஏற்படும் செலவினத்தை ஈடு செய்யும் பொருட்டு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் விளிம்புத் தொகை வழங்கப்பட்டு வருவதுடன், நட்டத்தில் செயல்படும் நியாயவிலைக் கடைகளை சிறப்பாக நடந்தும் பொருட்டு அரசால் மானியம் வழங்கப்படுகிறது.

2010-11 முதல் 2016-17 வரை பொது விநியோகத் திட்ட மானியமாக ரூ.1,423.56 கோடி அரசால் வழங்கப்பட்டுள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:-

(ரூ.கோடியில்)

| வ. எண் | நிதியாண்டு | வழங்கப்பட்ட மானியம் |
|---|---|---|
| 1. | 2010-11 | 150.00 |
| 2. | 2011-12 | 150.00 |
| 3. | 2012-13 | 120.00 |
| 4. | 2013-14 | 120.00 |
| 5. | நிலுவை மானியம் (2010-11 முதல் 2013-14 வரை) | 308.80 |
| 6. | 2014-15 | 334.76 |
| 7. | 2015-16 | 120.00 |
| 8. | 2016-17 | 120.00 |
| | மொத்தம் | 1,423.56 |

2018-19ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ரூ.460.17 கோடி, பொது விநியோகத் திட்ட மானியம் மற்றும் நிலுவை மானியத்திற்கு நிதிஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

# இயல்-VI

# கூட்டுறவுக் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

## 1. முன்னுரை

கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்கள் மற்றும் உறுப்பினர்களின் அறிவுத் திறனை மேம்படுத்தும் பிரதான நோக்கத்துடன் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சியினை மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியமும், மாவட்ட அளவில் 29 மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்களும் மேற்கொண்டு வருகின்றன. மேலும் இந்நிறுவனங்கள் கூட்டுறவு இயக்கத்தின் அடிப்படை கோட்பாடுகளை பொதுமக்களிடையே கொண்டு செல்லும் பொருட்டும், விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டும் பொருட்காட்சிகள், கருத்தரங்குகள் மற்றும் கூட்டுறவு வார விழாக்களையும் ஏற்பாடு செய்து வருகின்றன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவுச் சங்கங்களின் நிகர இலாபத்தில் ஒரு பகுதியை கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கும், கூட்டுறவுக் கல்வி நிதிக்கும் வசூலித்து, அதனைப் பராமரித்து வருகிறது. இந்த நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி, கல்வி, பயிற்சி மற்றும் கூட்டுறவு தொடர்பான செய்திகளை மக்களிடையே கொண்டு செல்வதற்கு பயன்படுத்தப்படுகிறது.

## 2. கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம்

மாநிலத்தில் 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாக செயல்பட்டு வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவுத்துறைப் பணியாளர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்கள் பயன்பெறும் வகையில் குறுகியகாலப் பயிற்சிகளை நடத்தி வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் சங்கப் பணியாளர்களுக்கு அஞ்சல்வழிக்

கல்வி மூலம் கூட்டுறவு பட்டயப் பயிற்சியினை அளித்து வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், 20 கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்களில் 1,391 மாணவர்கள் முழு நேரக் கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், 1,164 பணியாளர்கள் அஞ்சல்வழி கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி வகுப்பில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சமையல் கலை கைவினைஞர்களை உருவாக்கும் பொருட்டு, ஏழு கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மற்றும் இரண்டு கூட்டுறவு தொழிற் பயிற்சி நிலையங்களில் சான்றிதழுடன் கூடிய சமையல் கலை கைவினைஞர் (பொது) பயிற்சி அளிக்கப்படுகின்றன. இதுவரை, 460 மாணவர்கள் பயிற்சியில் சேர்ந்துள்ளனர். இவர்களில் 381 மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

### 3. தொழிற் கல்வி

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் இரண்டு கூட்டுறவுத் தொழிற்பயிற்சி நிறுவனங்கள் தலா ஒன்று வீதம் பர்கூர் மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடியில் ஒரு கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் நடத்தப்பட்டு வருகிறது. இக்கூட்டுறவுத் தொழிற் பயிற்சி நிலையங்களில், கணினி தொழில்நுட்ப உதவியாளர் பயிற்சி, நகை மதிப்பீட்டாளர் பயிற்சி, தையற்கலை, மின் பழுதுபார்த்தல், சமையல் கலை கைவினைஞர் பயிற்சி ஆகிய பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், தொழிற்பயிற்சி நிறுவனங்களில், 293 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும், இலால்குடி கூட்டுறவுத் தொழில்நுட்பக் கல்லூரியில் இயந்திரப் பொறியியல், கணினி பொறியியல், மின்சாரம் மற்றும் மின்னணு பொறியியல் பட்டயப் பயிற்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், மேற்காணும்

பட்டயப் பயிற்சியில் 370 மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**4. கூட்டுறவு மேலாண்மை தொடர்பான உயர் பட்டயப் பயிற்சி மற்றும் குறுகியகாலப் பயிற்சி**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், தேசிய கூட்டுறவு பயிற்சிக் குழுவால் (புதுடெல்லி) மதுரை மற்றும் சென்னையில் நடத்தப்பட்டு வரும் கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களுக்கு நிதி உதவி அளித்து வருகிறது. இப்பயிற்சி நிலையங்களில் கூட்டுறவு மேலாண்மையில் உயர் பட்டயப்பயிற்சி நடத்தப்பட்டு வருகின்றன. இவற்றில் துறையின் பணியாளர்களுக்கும், கூட்டுறவு நிறுவனப் பணியாளர்களுக்கும் குறுகியகாலப் பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. 2017-18 ஆம் ஆண்டில், 6,910 பணியாளர்கள் குறுகிய காலப் பயிற்சி பெற்றுள்ளனர். மேற்படி இரு மேலாண்மை நிலையங்களும் வணிக மேலாண்மையியல் முதுகலை பட்டப்படிப்பை அளித்து வருகின்றன.

**2017-18ஆம் ஆண்டில் நடேசன் கூட்டுறவு மேலாண்மை நிலையத்தின் மூலம்** 2,616 **பணியாளர்கள் 79 குறுகிய காலப் பயிற்சி பெற்றுள்ளனர்**.

**5. பல்கலைக் கழகங்களில் கூட்டுறவு ஆராய்ச்சி**

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவில் ஆராய்ச்சி மேற்கொள்ள மாணவர்களை ஊக்குவிக்கும் வகையில் சென்னைப் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், பெரியார் பல்கலைக் கழகம் மற்றும் காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ரூ.5 இலட்சம் வைப்புத் தொகை வைத்துள்ளது. இத்தொகை, தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து கிடைக்கும் வட்டித் தொகை மூலம் கூட்டுறவு மற்றும் அதன் தொடர்புடைய இனங்களில்

ஆராய்ச்சி செய்யும் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரை 21 ஆராய்ச்சித் திட்ட செயல்களுக்கு உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது.

## 6. கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியின் பயன்பாடு

கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 3% தொகையை தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக்கு அளிக்கின்றன. இந்நிதி, கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்ற பிறகே விடுவிக்கப்படுகிறது. கூட்டுறவு ஆராய்ச்சிக்கு மானியமாகவும், அதே சமயம் கூட்டுறவு வளர்ச்சிக்கு வட்டியில்லாக் கடனாகவும் நிதியுதவி வழங்கப்படுகிறது. 2011-12 முதல் 2017-18 வரை ரூ.52.67 கோடி மானியமாகவும், ரூ.160.22 கோடி வட்டியில்லாக் கடனாகவும் விடுவிக்கப்பட்டுள்ளது. இத்தொகை கூட்டுறவுச் சங்கங்களில் பாதுகாப்புக் கதவுடன் கூடிய பாதுகாப்பு அறை கட்டுதல், நுகர்வோர் சுய சேவைப்

பிரிவை நவீனப்படுத்துதல், வங்கிகளை நவீனப்படுத்துதல் மற்றும் கணினிமயமாக்குதல், அலுவலகக் கட்டிடம் கட்டுதல், துரித சிப்பமிடும் கருவிகள் வாங்குதல், எடையிடும் இயந்திரம் அமைத்தல், பதனிடும் அலகுகள் அமைத்தல், கரும்பு அறுவடை இயந்திரம் வாங்குதல், கூட்டுறவு வளாகம் கட்டுதல், நெசவாளர்களுக்கு கைத்தறி மற்றும் பெடல் தறிகளை வழங்குதல் போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படுகிறது.

## 7. கூட்டுறவுக் கல்வி நிதியின் பயன்பாடு

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்படும் கூட்டுறவுக் கல்வி நிதிக்கு கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் நிகர இலாபத்தில் 2% தொகையை வழங்குகின்றன. இந்நிதியிலிருந்து கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி, கூட்டுறவு பிரச்சாரம், கூட்டுறவு விளம்பரம் போன்ற பணிகளுக்கு கூட்டுறவுக் கல்வி நிதிக் குழுவின் ஒப்புதல் பெற்று நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. 2011-12 முதல் 2017-18 வரை ரூ. 49.62 கோடி மானியமாக

விடுவிக்கப்பட்டுள்ளது. இந்நிதி, கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கும், துறை அலுவலர்களுக்கும் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துதல், மாவட்டங்களில் உறுப்பினர் கல்வித் திட்டம், சிறப்பு உறுப்பினர் கல்வித் திட்டம் மற்றும் இளைஞர் ஈர்ப்பு முகாம்கள் நடத்துதல், அகில இந்திய கூட்டுறவு வார விழாக்கள் கொண்டாடுதல் ஆகியவற்றிற்கும் பயன்படுகிறது. அனைத்து துணைப்பதிவாளர்களுக்கும், சட்டப்பணிகள் தொடர்பான அறிவுத்திறன் வளரும் பொருட்டு, இது குறித்து மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.

# இயல்-VII

# ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

1. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சி திட்டமானது, ஒரு குறிப்பிட்ட பகுதியில் இயங்கும் பல்வேறு வகையான கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்குத் தேவையான உட்கட்டமைப்பு, பங்கு மூலதனம், விளிம்புத்தொகை போன்றவற்றை வழங்கிட தேசிய கூட்டுறவு வளர்ச்சிக்கழகத்தால் தோற்றுவிக்கப்பட்ட திட்டமாகும். இத்திட்டம், தமிழ்நாடு அரசின் ஆலோசனையின்படி, தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தால் கண்டறியப்பட்ட மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டம் 5 ஆண்டுகளில் செயல்படுத்தப்படும்.

2. இத்திட்டத்திற்கான நிதி உதவியை மாநிலஅரசால் விடுவிக்கப்பட்டு, பின்னர் மறு நிதியாக தேசிய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திலிருந்து மீளப் பெறப்படுகிறது. மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியானது திட்ட செயலாக்கத்திற்கு முகமையாக சம்பந்தப்பட்ட மாவட்டத்தில் செயல்படும். நிதி வழங்கும் முறை கீழ்க்கண்டவாறு :-

| வ. எண் | திட்டப்பணிகள் | தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மாநில அரசுக்கு (%) | | | மாநில அரசு கூட்டுறவு நிறுவனங்களுக்கு (%) | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | கடன் | மானியம் | மொத்தம் | கடன் | பங்கு மூலதனம் | மானியம் | மொத்தம் |
| 1. | கட்டுமானப்பணிகள், ஆலை & இயந்திரங்கள் மற்றும் உட்கட்டமைப்புகள் | 100 | - | 100 | 50 | 50 | - | 100 |
| 2. | கூட்டுறவுகளுக்கு விளிம்புத் தொகை / பங்கு மூலதனம் | 100 | - | 100 | - | 100 | - | 100 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3. | மனித ஆற்றல் மேம்பாடு & பயிற்சி மற்றும் ஊக்கத்தொகைகள் | - | 50 | 50 | - | - | 100 | 100 |
| 4. | திட்ட செயலாக்க முகமை (தொடர்புடைய மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) மற்றும் மாநில கண்காணிப்புக் குழுவுக்கு நிர்வாக நிதி உதவிகள் | - | 50 | 50 | - | - | 100 | 100 |

தமிழ்நாட்டில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் **1989-**ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது**.** ரூ**.462.97** கோடி திட்ட மதிப்பீட்டில்**, 28** மாவட்டங்களில் திட்டம் ஏற்கனவே நிறைவேற்றப்பட்டுள்ளது**.** **தற்சமயம்**, **நாமக்கல்**, **திருவள்ளூர்**, **கன்னியாகுமரி மற்றும் சென்னை ஆகிய** 4 **மாவட்டங்களில் ரூ**.355.78 **கோடி திட்ட மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று வருகின்றன**.

# இயல் -VIII

## கூட்டுறவுத் தேர்தல்

தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 14 ஆண்டுகளுக்குப் பின், 2013ஆம் ஆண்டில் தேர்தல் நடைபெற்றது. தமிழ்நாடு அரசு, 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (நான்காவது திருத்தம்) சட்டம் 2012-இன்படி சேர்க்கப்பட்ட 33-A என்ற புதிய பிரிவில் தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்த தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் அமைத்திட வகை செய்துள்ளது. பிரிவு 33-A-இன் கீழ் அரசினால் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கத் தேர்தல் ஆணையர் நியமனம் செய்யப்பட்டு, தேர்தல் ஆணையம் 08.02.2013 முதல் செயல்படத் துவங்கியது.

அரசியல் அமைப்பு 97வது திருத்தச் சட்டம், 2011-இன்படி, தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக் குழுவில் ஒரு ஆதி திராவிடர் உறுப்பினரும், இரண்டு பெண் உறுப்பினர்களும் மட்டுமே இருக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. சமூக நீதியினை உறுதி செய்யும் பொருட்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டத்தில் 2013ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட திருத்தத்தின் படி தமிழ்நாட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவில் 18% ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் மற்றும் 30% பெண்களுக்கும் இட ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2013இல் 22,552 சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டு 2,04,889 நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

தற்போது, தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம், முதல் கட்டமாக தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு (வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் தவிர) நான்கு நிலைகளில், தேர்தல் நடத்திட 5.3.2018

தேர்தல் அறிவிப்பு வழங்கியுள்ளது. அதன்படி கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 பிற செயற்பதிவாளர்கள் ஆகியோரின் கட்டுப்பாட்டில் செயல்படுகிற 18,435 தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 12.3.2018 முதல் 7.5.2018 வரை தேர்தல் நடத்திட தேர்தல் திட்டம் வழங்கியது. முதல் கட்டம் முதல் நிலையில் நடைபெற்ற தேர்தலில் தேர்வு செய்யப்பட்ட நிர்வாகக் குழுவினர் பொறுப்பேற்றுள்ளனர். இரண்டு, மூன்று மற்றும் நான்காம் நிலைகளுக்கு தொடங்கப்பட்ட தேர்தல் நடவடிக்கைகள் மாண்பமை உச்சநீதி மன்றத்தின் ஆணைக்கிணங்க, சென்னை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்படவிருக்கின்ற தீர்ப்பின் அடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

# நிறைவுரை

தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம், மக்கள் இயக்கமாக உருவெடுத்து, விவசாயிகள், நுகர்வோர்கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றன. தற்போது மாறிவரும் தொழில்நுட்பங்களின் அதிவேக மாற்றங்களுக்கேற்ப, இதர நிறுவனங்களுக்கு இணையாக கூட்டுறவு நிறுவனங்கள் தமது செயல்பாடுகளை மேம்படுத்தி வருகின்றன.

“**கூட்டுறவே நாட்டுயர்வு**“ என்ற அடிப்படையில், “**வறுமைக் கோட்டிற்கு கீழ் எவருமே இருக்கக் கூடாது**” என்ற இந்த அரசின் கொள்கையை முழுவதுமாக நிறைவேற்ற கூட்டுறவு நிறுவனங்கள் அயராது செயல்பட்டு வருகின்றன.

**செல்லூர் கே.ராஜூ**
**கூட்டுறவுத்துறை அமைச்சர்**